**செய்தி வெளியீடு எண்: 601** **நாள் : 26.11.2014**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் 26.11.2014 இன்று பதிவுத்துறை செயல்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள். அரசு முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை, பதிவுத்துறைத்தலைவர் திரு.சு.முருகய்யா, இ.ஆ.ப., ஆகியோருடன் கூடுதல் பதிவுத்துறை தலைவர்களும் கலந்து கொண்டனர். மேலும் அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள், உதவி பதிவுத்துறை தலைவர்கள், மாவட்டப் பதிவாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) கூட்டத்தில் பங்கேற்றனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவுத்துறையில் கடந்த 2013-14ம் ஆண்டிற்கான வருவாய் இலக்காக ரூ.9221.98 கோடி நிர்ணயிக்கப்பட்டு ரூ.8055.74 கோடி வருவாய் இலக்கு எய்தப்பட்டுள்ளது. 2014-15ம் ஆண்டிற்கு வருவாய் இலக்காக ரூ.10470.18 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கில் 31.10.14 முடிய ரூ.4585.07 கோடி வருவாய் எய்தப்பட்டுள்ளது. 2014-15ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இலக்கை எய்திட அனைத்து அலுவலர்களும் கூடுதல் கவனம் செலுத்தி முனைப்புடன் செயல்பட வேண்டுமென அறிவுறுத்தினார்கள்.

வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் பதிவுத்துறை அலுவலகங்களில் ஆவணங்களை பராமரிப்பதற்கு மற்றும் பணியாளர்கள் முழு அளவில் பணியாற்ற போதிய இடவசதி இல்லாததை கருத்தில் கொண்டும், சிறிய இடங்களுக்கு அதிக அளவு வாடகை தரவேண்டிய நிலை உள்ளதை கருத்தில்கொண்டும், அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருதல், மாற்றுத் திறனாளிகளுக்கான

சாய்தள மேடை அமைத்தல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி வாடகை கட்டிடங்களில் இயங்கிவரும் சார்பதிவாளர் அலுவலக கட்டிடங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்த கட்டடங்கள் கட்டித்தர அரசுக் கொள்கை முடிவு எடுத்துள்ளது.

இதனடிப்படையில் ஏற்கெனவே சுமார் 104 கோடி ரூபாய் செலவில் 21 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்களில் அமைந்த 40 சார்பதிவாளர் அலுவலகங்கள் உட்பட 175 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது. இதில் 38 சார்பதிவாளர் அலுவலகங்களும் பதிவுத்துறை பயிற்சி நிலையத் தங்கும் விடுதியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது விழுப்புரம், நாமக்கல், செங்கல்பட்டு, ஈரோடு மற்றும் சேரன்மகாதேவி ஆகிய 5 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்கள், 30 சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றில் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்துள்ளன. 2014-15ம் ஆண்டு மானியக்கோரிக்கை அறிவிப்பின் போது 10 சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளடக்கிய 5 ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகங்களுக்கும் தனித்தனியாக 25 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் ரூ.25 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். எஞ்சியுள்ள 67 சார்பதிவாளர் அலுவலகங்களில் 40 சார்பதிவகங்களுக்கு சொந்த கட்டிடம் கட்ட நிலம் பெறப்பட வேண்டும். இதில் 5 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு தனியாரால் நிலம் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு நிலம் பெறப்பட்டு சொந்த கட்டடம் கட்டப்பட்டுவிட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் “அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் 5 ஆண்டுகளுக்குள் சொந்த கட்டடம் கட்டப்படும்” என்ற இலக்கு செயலாக்கப்பட்டு சாதனை முழுமைபெறும். எனவே இதனை கருத்தில் கொண்டு துறை அலுவலர்கள் நிலம் கையகப்படுத்த முழு முயற்சியுடன்

செயல்பட வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருடன் தொடர்பு கொண்டு இந்நடவடிக்கையைத் துரிதப்படுத்தவும் அறிவுரை வழங்கினார்.

பொதுமக்கள் தங்களது சொத்து குறித்த வில்லங்கத்தை இலவசமாக இணையவழி தேடுதல் மேற்கொள்ளும் வசதி 11.06.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. பொதுமக்கள் பயன்பாட்டிற்கான இந்த இலவச வசதியின் மூலம் 11.06.2014-ல் இருந்து 18.11.2014 வரை 22,33,356 வில்லங்க தேடுதல்கள் பொதுமக்களால் இலவசமாக இணையவழி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட குழுவில் தீர்மானித்தவாறு வலை அடிப்படையிலான மென்பொருள் உருவாக்கம் மற்றும் செயல்படுத்தும் திட்டம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு செய்தார்கள். மேலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்பொழுது கணிணிமயமாக்கல் முழுமைப்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு தேவையான பெரும்பாலான சேவைகள் துரிதமாக இணையவழியில் கிடைக்க வழிவகை ஏற்படும் என அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் விதி 110ன் கீழ் வெளியிடப்பட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகள் மற்றும் நிதிநிலை அறிக்கையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள (Budget Announcement) அறிவிப்புகள் ஆகியவற்றின் பணி முன்னேற்றம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

ஆள்மாறாட்டப் பதிவு மற்றும் போலி ஆவணப்பதிவு ஆகியவற்றை தடைசெய்யும் நோக்கில் அரசால் இடப்பட்டுள்ள ஆணைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டும் எனவும், முன் ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்கள், சமீபத்திய வில்லங்கச் சான்றுகள் ஆகியவற்றை பரிசோதித்து பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் ஆவணப்பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அரசு நிர்ணயித்த வருவாய் இலக்கை அடைய அனைத்து அலுவலர்களும் சீரிய முயற்சிகள் எடுக்க வேண்டும் எனவும், பொதுமக்களுக்கு குறைகளற்ற நிறைவான சேவையை வழங்க வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**